# தஞ்சையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - நடைபயிற்சியின்போது வாக்கு சேகரித்த காட்சி!



நேற்று (23.3.2024) காலை தஞ்சாவூர் கீழ ராஜவீதியில் நடைபயிற்சியின் போது, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுடன் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டனர். உடன் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) தஞ்சாவூர் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் ச.முரசொலி அவர்களுக்கு ஆதரவாக தஞ்சாவூர் காமராஜர் காய்கறி சந்தைப் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார்கள். உடன் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) தஞ்சாவூர் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் ச.முரசொலி அவர்களுக்கு ஆதரவாக தஞ்சாவூர் காமராஜர் காய்கறி சந்தை பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்த தேனீர் கடையில் தேனீர் அருந்தினார். உடன் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) காலை நடைப்பயிற்சியின் போது, தஞ்சாவூர் அன்னை சத்திய விளையாட்டு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறுவர், சிறுமிகளை சந்தித்து உற்சாகப்படுத்தினார். உடன் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

## அவிநாசி சட்டமன்றத் தொகுதி கூட்டணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

திருப்பூர், மார்ச் 24-

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அவிநாசி சட்டமன்ற தொகுதிஇந்தியாகூட்டணியின்ஆலோசனைக்கூட்டம் 22.03.2024வெள்ளிக்கிழமை அன்று அவிநாசி வடக்கு ரத வீதியில் அமைந்துள்ள கோவம்ச திருமண மண்டபத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் அவிநாசி ஒன்றிய கழக செயலாளர், திருப்பூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஈ.ப. சிவப்பிரகாஷ்வரவேற்புரையில், கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல் கிருபா சங்கர், திருப்பூர் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், பொருளாளர் சு.சாமிநாதன், தலைமை செயற்குழுஉறுப்பினர்எஸ். சரவணன்நம்பி,திருமுருகன் பூண்டி ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர். பழனிசாமி, சேவூர் ஒன்றிய கழக செயலாளர் க. பால்ராஜ், திருமுருகன் பூண்டிநகரகழகசெயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, திருப்பூர் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவிநாசியப்பன், திருமுருகன்பூண்டி நகர மன்ற தலைவர் நா.குமார், அவிநாசி பேரூராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தேர்தல் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் திராவிடர் கழகம் ராமசாமி, இந்திய தேசிய காங்கிரஸ் தங்கமுத்து, லட்சுமணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முத்துசாமி, பொன்னுசாமி, சண்முகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முத்துசாமி, ஈஸ்வரமூர்த்தி, மதிமுக சுப்பிரமணியம், கோவிந்தராஜ், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி குமார், ராயப்பன்,ஸ்ரீதர்,கணேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பழ.சண்முகம், ரங்கசாமி.ஆதித்தமிழர்பேரவை மணி, ரங்கசாமி, இந்திய யூனியன்முஸ்லீம்லீக்சிராஜ், அப்பாஸ்,மனிதநேயமக்கள் கட்சி அபுஷாலிக், ரஹ்மத்துல்லாஹ்,பார்வர்டு பிளாக் கட்சி தாமோதரன், மக்கள் நீதி மய்யம் சுரேஷ், தமிழ்ப்புலிகள் சுரேஷ் குமார், திருப்பூர் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் எம்.எஸ். மணி,திருப்பூர்மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வெ. ராதாகிருஷ்ணன்,அவிநாசி பேரூர் திமுக அவைத்தலைவர் ராயப்பா, திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக சிவபாலன் மற்றும் இந்தியா கூட்டணியின் அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் அவிநாசி பேரூர் கழகசெயலாளர்திராவிடன் வசந்தகுமார் நன்றியுரை யாற்றினார்.

### கோரிக்கைகளை நிறைவேற்றி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி

## நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் வாக்கு சேகரிப்பு!

### கோவில் பூசாரிகள் நலச் சங்க தலைவர் பி.வாசு அறிக்கை!

சென்னை, மார்ச் 23 -

கோவில் பூசாரிகள் நலச் சங்கம் விடுக்கும் கோரிக்கைகளை அவ்வப்போது நிறைவேற்றி அதற்காக அரசாணை களை வெளியிட்டு வரும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அதன் தலைவர் பி. வாசு, முதலமைச்சரைச் சந்தித்து ஆதரவு தெரிவித்த பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 39 தொகுதிகளிலும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோவில் பூசாரிகள் நலச்சங்கத் தலைவர் பி.வாசு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அவர்கள் சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சமர்ப்பிக்கும் நியாயமான கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து நடைமுறைப்படுத்தி வருவதற்கு மனமார்ந்த நன்றி.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் 15,000 திருக்கோவில்களில் எவ்வித ஊதியமும் இன்றி பணியாற்றிவந்த பூசாரிகளுக்கு முதல்முறை யாக மாதம் ரூ 1,000 ஊக்கத் தொகை வழங்கி அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வைத்தது.

கிராமப்புற திருக்கோவில் களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 60 வயதிற்கும் மேற்பட்ட வறிய பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியத் தொகையை ரூ. 4,000 ஆக உயர்த்தி அவர்களின் வறுமையைக் களைய வழி வகை செய்தது.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த திருப்பணி நிதியில் 18 சதவீதம் அதாவது கிட்டத்தட்ட 39 ஆயிரம் ரூபாய் ஜி.எஸ்.டி. வரிப் பிடித்தம் செய்தது தமிழ்நாட்டில் உள்ள லட்சோப லட்சம் பக்தர்களின் மனதைப் பெரிதும் பாதித்தது. இத்தகைய வரிப் பிடித்தத்தை ஒன்றிய அரசு ரத்து செய்ய தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச்சங்கம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தது.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மலையரசன் கட்சி தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட வாணாபுரம் பகண்டை கூட்டுச் சாலையில் தனது தேர்தல் பிரச்சாரத்தை நடை பயணத்துடன் துவக்கினார்.

### ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின்

## திருப்பூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் – இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது!

திருப்பூர், மார்ச் 24 -

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. இந்தியா கூட்டணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 22.03.2024 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொள்ளாச்சி நாடாளுமன்ற வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி, ஈரோடு நாடாளுமன்ற வேட்பாளர் கே.இ. பிரகாஷ் ஆகியோரை அறிமுகம் செய்துவைத்து தேர்தல் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினர்.

இதில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் உடுமலைப்பேட்டை தமிழ்மறை, மடத்துக்குளம் சித்திக், காங்கேயம் உமாராணி, தாராபுரம் கோட்டை அப்பாஸ், மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன்,

துணை செயலாளர்கள் ராசி கே.ஆர். முத்துக்குமார், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு. ஜெயக்குமார்,

இந்தியா கூட்டணியில் அங்கம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி தெற்கு மாவட்ட தலைவர் கே.தென்னரசு, பொள்ளாச்சி பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளர் கே. செந்தில்குமார், மார்க்ஸட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் கே.காமாராஜ், மாவட்ட செயலாளர் சே.முத்துக்கண்ணன், இந்தியா கம்யூனிஸ்ட் கட்சி கே.என்.இசாக், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் சி.ரகுபதி ராகவன், கிழக்கு மாவட்ட செயலாளர் கே.எஸ் நந்தகுமார், மறுமளர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் புத்தரசல் பி.கே.மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சி த.சதீஷ்குமார், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணை தலைவர் பி.எஸ்.அம்சா பாய், தெற்கு மாவட்ட செயலாளர் அப்துல் ஜபார், திராவிடர் கழகம் தாராபுரம் மாவட்ட செயலாளர் க.கிருஷ்ணன், திருப்பூர் மாவட்ட செயலாளர் யாழ் ஆறுச்சாமி, திராவிட இயக்க தமிழர் பேரவை பொது செயலாளர் சிற்பி செல்வராஜ், தமிழக வாழ்வுரிமை கட்சி திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரமேஷ், மக்கள் நீதி மைய்யம் திருப்பூர் மாவட்ட செயலாளர் சி.குரு, மனித நேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் பி.ராஜாமுகமது, ஆதி தமிழர் பேரவை திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் ப.ராஜேந்திரன், வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் பெரியார் தாஸ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில் ஜி.எஸ்.டி என்ற பெயரில் மாநில அரசிடம் பெருமளவு வசூலித்துக் கொண்டு பி.ஜே.பி கட்சி ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியும். இந்திய கூட்டணி அங்கம் வகிக்கும் தமிழ்நாடு அரசுக்கு சொற்ப அளவு நிதி ஒதுக்கியும், மேலும் இயற்கை பேரிடர் காலங்களில் கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமலும், மேலும் ஏனைய திட்டங்களுக்கும், இது போன்ற நிலையை உருவாக்கி மாநில அரசின் நிதி ஆதாரங்களை சுருக்கியும் இவ்வாறு வஞ்சிக்கும் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதாவின் மோடி ஆட்சிக்கு பாடம் கற்ப்பிக்கும் வகையில் நமது இந்தியா கூட்டணி சார்பில் தோழர்கள் அயராது களப்பணியாற்றி ஈரோடு நாடாளுமன்ற வேட்பாளரான கே.ஈ.பிரகாஷ் மற்றும் பொள்ளாச்சி நாடாளுமன்ற வேட்பாளரான கே.ஈஸ்வரசாமி ஆகியோரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடைய செய்ய திராவிட மாடல் அரசின் நலத்திட்ட உதவிகளை பொது மக்களிடம் எடுத்துக்கூறி வாக்குகளாக மாற்றும் வகையில் நமது கூட்டணி நிர்வாகிகளும், தோழர்களும் செயல்படுவதென திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இந்தியா கூட்டணி கட்சி சார்பாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியில் தமிழகத்தில் இந்தியா கூட்டணி மிக வலுவாக அமைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தி.மு.கழக திராவிட மாடல் ஆட்சியின் நலதிட்ட உதவிகளை பொது மக்களிடம் சென்று வீடு விடாக எடுத்துக்கூறி பொன்னான வாக்குகளை ஓட்டுகளாக மாற்றும் வலிமையை நமது கூட்டணி கட்சி தோழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு அயராது களப்பணியாற்றி திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குட்பட்ட ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட காங்கேயம், தாராபுரம், சட்டமன்றத் தொகுகளிலும் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் கழக வேட்பாளரை வெற்றிபெற செய்வதென இந்தியா கூட்டணி சார்பாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட இந்தியா கூட்டணி சார்பாக ஈரோடு, பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி வாரியாக ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் வாரியாக தேர்தல் பணிகுழு அமைத்து செயல்படுவது எனவும். மேலும் ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக இந்தியா கூட்டணி சார்பாக ஒருங்கிணைந்து பூத் கமிட்டி அமைப்பதற்கு இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.